**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி**
**முன்னிலை - திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நான்குநேரி.**
**2025 ம் வருடம் டிசம்பர் திங்கள் 2 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**இடையீட்டு மனு எண்.2/2025 இன்**
**அசல் வழக்கு எண்.38/2018**

1. பூர்ணத் அம்மாள்
2. கதிரவன்
3. கண்ணன்
4. இசக்கிமுத்து
5. கனகமணி ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

லேசர் என்ற லெட்சுமணன் ...எதிர்மனுதாரர்/எதிர்வாதி

இம்மனு என் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சிவசங்கரன்.பி.எஸ்சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.த. வேல்முருகன்.எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ள நிலையில், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது வழக்கு சொத்துக்கள் சம்மந்தமான வருவாய் ஆவணங்களுடன் வாதி தரப்பு சாட்சியாக கூந்தன்குளம் கிராம நிர்வாக அதிகாரியை விசாரணை செய்வதற்கு உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2) மனுவின் சுருக்கம்** -

வழக்கு சொத்தானது 2 வது மனுதாரரின் தந்தையான ராசையாவின் அனுபவத்தில் இருந்து அதன் பின்னர் மனுதாரர்கள் அனுபவம் செய்து வருவதாகவும், வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களின் அனைத்து வருவாய் ஆவணங்களும் மனுதாரர்களின் தந்தை பெயரில் உள்ளதால் கிராம நிர்வாக அதிகாரியை விசாரிப்பது அவசியமாக உள்ளதால் கிராம நிர்வாக

அதிகாரியை விசாரணை செய்வதற்காக இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரைகளின் சுருக்கம்** -

மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மேலும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், மனுதாரரால் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறானவை என்றும், மேலும் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே மாண்புமிகு சார்பு நீதிமன்றம் நான்குநேரியில் அசல் வழக்கு எண்.80/2020ல் பாகப்பிரிவினை மற்றும் பாகபிரிவினை செய்யும் வரையில் எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரருக்கு சாதகமாக முதல்நிலை தீர்ப்பாணை பெறப்பட்டு, மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாகத்தை பிரிக்க வேண்டி இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு எண்.7/2025 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் கூட்டுக்குடும்ப சொத்தினை மறைத்து மோசடியாக பெறப்பட்ட பட்டாவை வைத்து வழக்கை நிருபணம் செய்ய முடியாது என்றும், எனவே ஏற்கனவே பெறப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் வழக்கானது முன்தீர்ப்பு தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால்,

அ. உரிமையியல் நடைமுறை கட்டளை.16 விதி.1ன் கீழ் கிராம நிர்வாக அதிகாரியை விசாரணை செய்யவதற்கு உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**5.** மனு மற்றும் ஆவணம் பரிசீலித்து பார்கையில் மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக ஆவணங்கள் மனுதாரர்களின் தந்தை பெயரில் உள்ளதால் கிராம நிர்வாக அதிகாரியை விசாரணை செய்வது அவசியம் என்பதால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறியுள்ள காரணங்களை மறுத்தும் ஏற்கனவே வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல்

செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மேற்படி வழக்கில் இடையீட்டு மனு எண்.7/2025 நிலுவையில் உள்ள போது அதனை மறைத்து இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஏற்கனவே மாண்புமிகு சார்புநீதிமன்றம் நான்குநேரியில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முதல்நிலை தீர்ப்பாணை பெற்று இறுதிநிலை தீர்ப்பாணைக்காக வேண்டி மனு நிலுவையில் உள்ளபோது அதனை மறைத்து இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் ஆட்சேபனையை வழக்கிலேயே தீர்மானிக்க இயலும் தவிர இந்த மனுவில் தீர்மானிக்க இயலாது என்பதாலும், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் மனுதாரர்களின் தந்தை பெயர் உள்ள விவரம் கிராம நிர்வாக அதிகாரியை விசாரித்தால் ஆவணங்கள் வழி தெரிய வரும் என்பதாலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் போதுமானதாக உள்ளதாலும், வழக்கு 7 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் உள்ளதால், வழக்கினை துரிதமாக முடிக்கும் நோக்கத்துடன் இம்மனுவை அனுதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதி இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**7.** முடிவாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2ம் நாள் என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2025.12.02 18:12:08 -0900

மாவட்ட உரிமையியல் நீதிபதி
நான்குநேரி.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2025.12.02 18:12:14 -0900

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நான்குநேரி.